DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 35/2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 4 |
| Name | : பாண்டி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2024.

\- - - - - - -

1 முதல் 6 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் உத்தப்புரத்தில் குடியிருந்துவருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நானும் உடன் பிறந்த 2 சகோதரர்களும் என் அப்பாவிடம் சொத்துக் கேட்டுச் 10 ஆண்டுகளுக்கு முன்னர் சென்றோம். அப்பா சொத்துப் பிரித்துக் கொடுக்க மறுத்தார். அங்கு காசி என் அப்பாவின் இரண்டாம் தாரத்து மகன் காசி என்பவர் அரிவாளைக் கொண்டு அரிவாளைக் கொண்டு கருப்பையாவின் கழுத்தை நோக்கி வெட்ட முற்படும்போது அவன் கையைகொண்டு தாங்க கை துண்டானது. நான் போய் விலக்க முற்பட்டபோது ராஜாமணி என்பவர் வலது காலின் முட்டியில் அரிவாளைக் கொண்டு வெட்டினார். நான் கீழே விழுந்துவிட்டேன். அப்போது சின்னக்கருப்பபையா, கருப்பையா கீழே விழுந்த

அரிவாளை எடுத்து என் இடது கையை அறுத்ததார். கோமாளி என்ற சுப்பையா கல்லை எடுத்து என் தலையின் பின்புறம் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினாட்ர. அதன்பிறகு நான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன். பின்னர், மதுரை, ராசாசி மருத்துவமனயில் சிகிச்சையிலிருந்தபோது மயக்கம் தெளிந்தது. போலிசார் மருத்துவமனையில் விசாரித்தார்கள். நான் நடந்த விபரத்தைச் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை -</u>

நான் தற்போது கூறியதுபோன்றுதான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு இரண்டு தாரம் என்றால் சரிதான். முதல் தாரம் கிருஷ்ணம்மாள் என்றால் சரிதான். இரண்டாம் தாரம் சுப்புலெட்சுமி என்றால் சரிதான். பாண்டியம்மாள், பாண்டி, கருப்பையா ஆகிய 3 பேரும் முதல் தாரத்து பிள்ளைகள் என்றால் சரிதான். காசி என்ற காசிராஜன் என்பவர் இரண்டாம் தரத்து மகன் என்றால் சரிதான். என் தகப்பனாருக்குப் பாத்தியப்பட்ட சொத்து உத்தப்புரத்தில் இருக்கிறது என்றால் சரிதான். நான் தேனி -அம்மச்சியாபுரத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். என் தம்பி கருப்பையா பேரையம்பட்டியில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். என் அக்கா பாண்டியம்மாளின் மகள் முத்து, கருப்பையாவின் மனைவி என்றால் சரிதான். நானும், என் தம்பி கருப்பையாவும் உத்தப்புரத்திற்கு வந்தோம் என்றால் சரிதான். அப்போது என் அப்பாவும் இளையதாரத்து மகன் காசி என்ற காசிராஜனும் மாட்டுக் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது அங்கு யாரும் இல்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை என் தம்பி கருப்பையா என் அம்மா கிருஷ்ணம்மாளுக்கு என் தந்தை இறந்துவிட்டதாகச் சொல்லி சொத்தை தானமாக எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றால் எனக்குத் தெரியாது. இன்று நீதிமன்றத்தில் என் தகப்பனார் ஆஜராகியுள்ளார் என்றால் சரிதான். அவருக்கு 80 வயதிற்கு மேல் இருக்கும்

என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் அதே நேரத்தில் என் மீதும், கருப்பையா மீதும் காசி என்ற காசிராஜன் அரிவாளைக் கொண்டு வெட்டியதாக ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்தப் புகார் பொய்ப் புகார் ஆகும். அந்தப் புகாருக்கு குற்ற எண். 210/2014 என்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனக்கு எதிராக காசி என்ற காசிராஜன் சாட்டிசியமளித்திருக்கிறார் என்றால் சரிதான். நானும், என் தம்பி கருப்பையாவும், 1ம் எதிரியின் வகையறாக்களை தாக்கிவிட்டு, இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு நானும் என் தம்பியும்தான் காரணம் என்றால் சரியல்ல. நானும், தம்பியும் அரிவாளைக் கொண்டு வெட்டும்போது அரிவாள் தவறி என் தம்பி மீதும் என் மீதும் பட்டது என்றால் சரியல்ல. நானும், என் தம்பியும்தான் உண்மையான குற்றவாளிகள் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 01.03.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.